# ஜெம்ஸ் சத்தம்

Since 1972

ஜனவரி 2023




Happy
New Year
2023
ஜெபப் பங்காளர்கள்
மற்றும்
வாசகர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு
நல்வாழ்த்துகள்
ஜெம்ஸ் குடும்பத்தினர்

# ஜெம்ஸ் சத்தம்

Since 1972

*Transforming Peoples to Transform Nations*

அன்பின் மடல் – 4

**சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்**

பிதாவின் மேலான திட்டம் – 11

பணித்தளச் செய்திகள் – 16

முன்னேற்றப் பணி முகவரிகள் – 29

சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் பங்குபெறும் கூட்டங்கள் – 31

*Published by*

**GEMS Educational and Media Services**

14/1, Jeba Nagar, Vasanthapuram South,
Near Vijaya Garden, Tirunelveli 627005
Ph. : 9488771655
E-Mail : media@gemsbihar.org

*Published for*

**Gospel Echoing Missionary Society**

11, 13th Cross Street, New colony
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

*Field office*

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

## 'ஜெம்ஸ்' என்பது,

*Gospel Echoing Missionary Society*

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹாராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.



# அன்பின் மடல்

*கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,*

பூத்துக்குலுங்கும் திராட்சக் கொடிகள் நிறைந்ததும், காய்த்து கனிகளால் நிறைந்ததுமான அத்திமரங்களால் சூழப்பட்டதும், கந்தப்பிசினினால் வாசனை ஊட்டும் மரங்களினால் நிறைந்ததுமான தன்னுடைய தோட்டத்தில் உலாவிவரும் நேசரின் நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துகள் (உன். 2:13; 4:16; 5:1). புத்தாண்டு பொங்கிவரும் எண்ணங்களால் ஒருபுறம் நிறைந்திருக்க, அனைத்தையும் செய்துமுடிக்கவேண்டுமே என்ற ஏக்கத் தொனியுடனே கூட, புது எண்ணெயால் அபிஷேகிக்கப்பட்டு, புதுப்பாடலால் நிறைந்த ஆண்டாக இருக்க வாழ்த்துகிறேன். (சங். 92:10; சங். 40:3)

**இந்த உற்சாகத்தின் மத்தியில், நமக்கு முன் கொடுக்கப்பட்ட காலம் ஓராண்டு குறைந்துபோனதும் உண்மை.** தனக்கு இன்னமும் கொஞ்ச காலம் மாத்திரமே உண்டென்று அறிந்த சத்துருவாம் சாத்தான் (வெளி. 12:12), மிகுந்த கோபம் கொண்டவனாய் வேகமாக தன்னுடைய **அக்கினி ஆஸ்திரங்களை** உபயோகிக்க ஆரம்பித்துவிட்டதனை நித்தமும் சந்திக்கவேண்டிய சபையாம் மணவாட்டி இன்னமும் நித்திரை மயக்கத்தில் இருப்பதும் (உன். 5:2), செயல்படவேண்டியதில் காலம் கடத்துவதும், சாக்குப்போக்குகளைச் சொல்லிக்கொண்டு (உன். 5:3) இன்னும் கொஞ்சம் **உறங்கட்டும்,** இன்னும் கொஞ்சம் **தூங்கட்டும்,** இன்னும் கொஞ்சம்

கைமுடக்கிக்கொண்டு **நித்திரை செய்யட்டும்** என்பது ஏனோ? (நீதி. 6:10). அது **சபையினை தரித்திரத்திற்கும், வறுமையின் தாக்குதலுக்கும் அல்லவோ வழிநடத்தும்** (நீதி. 24:33,34). அதனையும் அறியாமல் லவோதிக்கேயா சபையைப் போன்று, **ஐம்பம் அடித்துக்கொண்டு நிற்கிற நிலை, இந்த ஆண்டிலாவது முடிவுக்கு வராதோ?** (வெளி. 3:17). 'இனி காலம் செல்லாது' (வெளி. 10:6) என்று வானத்திலிருந்து பலமாய் கேட்டும் (வெளி. 10:4), **ஆழ்ந்த உறக்கத்தில் சில ஊழியரும்கூட எதையோ பிதற்றிக்கொண்டு திரிகின்றாரே!**

**சொப்பனங்கண்டவனைப் போல**, 'பசியாயிருக்கிறவன் தான் புசிக்கிறதாகச் சொப்பனம் கண்டும், விழிக்கும்போது அவன் வெறுமையாயிருக்கிறதுபோலவும், தாகமாயிருக்கிறவன், தான் குடிக்கிறதாகச் சொப்பனம் கண்டும், விழிக்கும்போது அவன் விடாய்த்துத் தவனத்தோடிருக்கிறதுபோலவும்' (ஏசா. 29:8), **வெறுமனே வாய்ச் சாலகத்தில் மாளிகையைக் கட்டுகிறவனைப் போல, பிரசங்க பீடத்தில் வாந்தி செய்துகொண்டிருக்கும் காட்சி, நம்மை கண்ணீர் விடச் செய்கிறது.** (ஏசா. 28:8; எரே. 48:26)

**வேறு சிலரோ, நமக்கு இருக்கும் கொஞ்ச பெலனை வைத்து, நாம் என்ன சாதித்துவிட முடியும் என்று ஒதுங்கி நிற்பதும்** (நியா. 6:11-16), **செயலாற்ற துணிவில்லாமல் தங்களின் நிலையையும், தேவனின் பராக்கிரமத்தினையும் புரியாமல் தத்தளிக்கும் காட்சியும்** கூடவே காணக் கிடைக்கிறது.

**நித்திரை மயக்கம்** (மத். 26:43), **தங்களைச் சுற்றி நடப்பவைகளை உணரக்கூடாது ஆக்கிவிட்டது** (அப். 12:9). **திறக்கப்படக்கூடியக் கதவோ, விழுந்துவிட்ட சங்கிலியோ, வழிநடத்தும் தேவ குரலோ அவர்களுக்குத் தெரியவேயில்லை; ஏன்? விளங்கவும் இல்லை; என்னே பரிதாபம்.** அநேக ஊழியங்களின் நடவடிக்கைகளைக் கவனித்தால், இது நன்கு வெளிப்படையாகத் தெரியும். **பிரபலமாகுவதிலேயே** அநேகருக்குக் கவனம் உள்ளதினால், **பணத்தைப் பெருக்குவதிலேயோ அல்லது கோமாளித்தனம் செய்து கூட்டத்தினைக் கவருகிறதிலேயோ அல்லது ஏதோ ஒன்றை புதுமையாகப் புகுத்த நினைப்பதினாலேயோ** (அதனுடைய விளைவு

என்ன? என்பதனை கூட்டிக் கழித்துப் பார்க்கக் கூடாதபடி, அந்த **அற்ப ஆசை** அவர்களுடைய கண்களைக் குருடாக்கினதினால்), **வெளிப்பாடுகள் நிறைந்த ஊழியம் என்று தம்பட்டம்** அடித்துக்கொள்வதாலோ, **உணர்வற்ற ஊழியங்கள்** ஏராளமாக எழும்பிவருகின்றன.

சில நேரங்களில் ஒரு காரியத்திற்காகச் செலவு செய்யப்படும் **பணம், மனித வளம், நேரம் போன்றவை ஏராளமாக வீண் ஜம்பத்திற்காக** வெளிப்பாடுகள் என்ற பெயரில் விரயமாகிறது அல்லவா? உதாரணமாக, 10,000 பேரை உலகின் மூலைகளிலும், இந்தியாவின் மூலைகளிலும் இருந்து கூட்டி ஜெபிக்கவைப்பது, எத்தனை பண விரயத்தினைக் கொண்டுவரும் என்பதனை அறிந்தவர் எத்தனை பேர்?

10,000 பேர் செலுத்தும் தொகை, ஆளுக்கு ரூ. 5000 என்றால் ரூ. 5,00,00,000 (5 கோடி). இவர்களின் சராசரி பிரயாணச் செலவும் இதரச் செலவும் கிட்டத்தட்ட ரூ. 10,000 என்றால் (ஏனென்றால், அநேகர் விமானத்தில் வருகிறார்கள்; சிலர் வெளிநாட்டிலிருந்து வருகிறார்கள்) ரூ. 10 கோடி. மற்ற கூடாரச் செலவுகளும், ஒளி மற்றும் ஒலிப்பெருக்கி, நடத்துவோரின் பிரயாணச் செலவுகளுமாக 5 கோடி வரை எதிர்பார்க்கலாம்; மொத்தம், **ரூ. 20 கோடி. இத்தனை பணத்தினை வைத்து ஜெபித்தால் தேசத்தில் எழுப்புதல் வந்துவிடும் என்பது என்னைப் பொறுத்தமட்டில் அபத்தமே.**

உடனே, அன்றைய பரிமளத் தைலத்தினை இயேசுவின் பாதத்தில் ஊற்றின மரியாளின் காரியத்தைச் சொல்லி, யூதாஸின் கருத்தையும் எடுத்துக்கூறி, எனக்கு யூதாஸ் என்று **'பட்டம்'** சூட்டிவிடுவார்கள் (மாற். 14:1–9; யோவா. 12:4). சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் எப்பொழுதுமே இப்படித்தான், மற்றவர்களின் காரியத்தினைக் குறை கூறுபவர் என்று சொல்லுவார்கள்.

ஆனால், தேவ சமூகத்தில் திறந்த மனதோடுகூட இந்தத் திட்டத்தினை கொஞ்சம் ஆராய்ந்தால் **(இது சுய லாபத்திற்காக இல்லாவிட்டாலும், சுய விளம்பரத்திற்குப் போதுமானது என்றே கூறுவேன்), பணம் வைத்திருப்பவர்கள் கூடி ஜெபித்தால்தான் எழுப்புதல் வரும் என்பது எளியவர்களின் ஜெபத்தினைக் கிண்டல் செய்வது போல இல்லையா?**

இஸ்ரவேலில் போய் 100 பேர் ஜெபித்தால்தான் தேசம் மாற்றப்படும் என்று, 100 பேரை தலா ரூ 1.5 (ஒன்றரை) லட்சம் கொடுத்து இஸ்ரவேலுக்கு அழைத்துச் சென்று ஜெபிக்கும்போது, **1.5 கோடி** செலவில் ஜெபம் என்றால், **தானியேல் பாபிலோனிலிருந்து எருசலேமுக்காக ஜெபித்ததும், நெகேமியா சூசான் அரண்மனையில் இருந்து ஜெபித்ததும் வீணானவை போலவே காட்சி அளிக்கும் அல்லவா!** (தானி. 6:10,11; நெகே. 1:1,4). யாருக்கோ இதனை தேவன் வெளிப்படுத்தினார்; எனவே, அந்த ஜெபத்தினால்தான் காரியங்கள் வாய்க்கும் என்ற காரியம், **தேவ முறைகளைக் கேலி செய்வதாகவே** தோன்றுகிறது!

**உல்லாசத்திற்காக அவர்கள் செலவழிக்காமல் இருக்கலாம்; ஆனால், விளம்பரத்திற்காக என்பதனை மறுக்க முடியாது. தங்கள் காரியங்களை அவர்கள் நியாயப்படுத்த, அநேக வாதங்களை வைக்கலாம்; ஆனால், தேவ வார்த்தையின் வெளிச்சத்தில் அவை மாயையானத் திட்டங்களே.**

நான் கூடி ஜெபிப்பதற்கு விரோதி அல்ல (யோவேல் 2:16,17; 2 நாளா. 20:3,4). 2 நாளா. 30:1–ல் எசேக்கியா ராஜா ஜனத்தினைக் கூட்டி ஜெபிக்கச் செய்தபோது, எழுப்புதல் எருசலேமிலே உண்டாயிற்று (2 நாளா. 30:26). ஆனால், எசேக்கியாவின் மகன் காலத்திற்குக் கூட **அதின் தாக்கம் உண்டாகவில்லையே** (2 நாளா. 33:2,3); மாறாக, தன் மகனையே தீ மிதிக்க வழி செய்தானே. (2 இராஜா. 21:6)

ஆனால், எஸ்றாவைப் பாருங்கள்; எஸ்றா 9–ம் அதிகாரம் அந்த காட்சியை நமக்குத் தருகிறதே. எஸ்றாவின் மனநிலையில் உண்டான அங்கலாய்ப்பு, 'என் வஸ்திரத்தையும், சால்வையையும் கிழித்து, என் தலையிலும், என் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கித் திகைத்தவனாய் உட்கார்ந்தேன்', அப்பொழுது சிறையிருப்பிலிருந்து வந்தவர்களுடைய குற்றத்தினிமித்தம் **(ஜனங்கள் பாபிலோனை விட்டது என்னவோ உண்மை; ஆனால், பாபிலோனின் ஆவியிலிருந்து விடுதலை பெறவில்லை)**, இஸ்ரவேலுடைய தேவனின் வார்த்தைகளுக்கு நடுங்குகிற யாவரும் என்னோடே தானாக **(அழைப்பில்லாமலேயே)** கூடிக்கொண்டார்கள். (வச. 3,4)

**தலைமையில் இருக்கிறவர்கள் சிந்திக்கவேண்டிய நேரமிது!** அன்றைக்கு எருசலேமில் ஜனத்தினைக் கூட்டுவது **எளிது**; கூடவே, அதிகபட்சத் தூரம் வெறும் **350 கி.மீ.** இவர்களோ, **3000 கி.மீ** தூரத்தில் இருப்பவர்களை இந்தியாவிலும், தென் ஆப்பிரிக்காவில் இருக்கிறவர்களை **15000 கி.மீ** தொலைவிற்கும் அழைக்கிறார்கள்; **என்னே அபத்தம்.** தங்களை அறிவாளிகளாகவும், ஆவிக்குரியவர்களாகவும் சித்தரிக்க விரும்புகிறார்களா? அல்லது எதனையோ தங்கள் வட்டாரத்தில் உள்ளவர்களுக்குக் காட்டிக்கொள்ள விரும்புகிறார்களா? **தேவ வெளிச்சத்தில் பதில் கேட்டால் கிடைக்குமே!**

**சத்துரு தந்திரமாக தேவ ஜனத்தின் பணம், நேரம், தாலந்துகள், திறமைகள், கவனம், கரிசனை அனைத்தையும் திசைதிருப்ப, அழகாகத் திட்டங்களைத் தீட்டி, அவர்களைக் கொண்டே நிறைவேற்றிவருகிறான்.**

பிரபல சுவிசேஷகர் ஒருவரின் மகள் அணியும் ஆடை TV—ல் ஒளிபரப்பப்படும்போது, அதனைக் காணும் இளம் பிள்ளைகள், 'அவளையே தேவன் உபயோகப்படுத்துகிறாரே. நானும் ஏன் இப்படி உடுத்தக்கூடாது?' என்று கேள்வி கேட்டு, பெற்றோரின் வாயை மூடும் பிள்ளைகள் எத்தனை பேர்? முன்மாதிரியாக உடுத்தவேண்டிய அவர்களின் உடை, இப்படியாகத் தடையாக மாறுவதற்கு அவர்களுக்குப் போதனை செய்வது எந்த ஆவி (1 இராஜா. 22:19—24). **இடறல் உண்டாக்குவது வலதுகையாக (மிகவும் எல்லா வேலைக்கும் உபயோகப்படுவது) இருந்தாலும், வெட்டி எறிந்துவிடு** என்றவர்தானே அன்பின் ரூபியாம் இயேசு (மத். 5:30). இவரைப் போதிக்கும் இவர்கள் இந்த வசனத்தினை ஏன் அப்பியாசிப்பதில்லை?

கர்த்தர் எனக்குச் சொன்னார் என்றதனால், மற்ற உண்மைகளுக்கு இடம் இல்லை என்று அர்த்தம் இல்லையே. விரயமாக்கப்படுவதும், **இடறப்பண்ணுவதும் "நட்சத்திர ஊழியர்களாலேயே!"** சாலொமோனின் தேவ ஆலயத்தினைப் போன்ற ஓர் அலங்கார ஆலயத்தைக் கட்ட வெளிப்பாடு பெற்றேன் என்கிறார் ஒரு தேவ மனிதர். அந்த வெளிப்பாட்டினை, தேவ இராஜ்யத்தினை **உண்மையாய்க் கட்ட விரும்புகிறவர்களோடு பகிர்ந்துகொண்டு ஜெபித்திருந்தால், சரியான பாதையில் நடந்திருக்கலாமே. இந்த ஆண்டில் அரசின் சட்டங்கள் இன்னமும் கடுமையாகலாம், சுவிசேஷச் செய்தியினை அறியாதவர்களுக்குப் பரப்ப முடியாதபடி தடைகள் பெருகலாம்.**

இருக்கும் கொஞ்ச காலத்தினைக் கருத்தில் கொண்டு, **தேவன் கட்டளையிடாத அக்கினிகளை அடையாளம் கண்டுகொண்டு (லேவி. 10:1,2), விரயங்களையும், வீணடிக்கும் ஊழிய முறைகளையும், வேதம் காட்டிக்கொடுக்காத காரியங்களையும், இயேசுவோ அல்லது அப்போஸ்தலர்களோ செய்திராத முறைகளையும் விட்டுவிட்டு திரும்புவோம்**.

நாளொன்றுக்குப் புதிதாக பூமியில் சேரும் ஜனத் தொகையின் பெரும் பகுதி, நம் நாட்டிலேதான் உண்டு. **2030-ல்** நாம் சீனா உட்பட அனைத்து நாடுகளையும் **மிஞ்சிவிடுவோம்.** இன்று 142 கோடியை உள்ளடக்கிய நம் நாடு, **152 கோடியைத்** தொட்டு, அனைத்து நாடுகளையும் முந்திக்கொள்ளும். வரும் **8 ஆண்டில் 10 கோடி பேர்** புதிதாகச் சேர்க்கப்படப்போகிறார்கள்; **12 கோடி** பேர் பிறக்கப்போகிறார்கள்; 2 கோடி பேர் இறக்கப்போகிறார்கள். இறக்கப்போகிறவர்களும், பிறக்கப்போகிறவர்களுமாகச் சேர்த்து, ஒரு வருடத்தில் **2 கோடி** புதியவர்களுக்கும் நற்செய்திப் பணி கடந்துசெல்ல வேண்டும். தற்போது உலகின் ஜனத் தொகை 800 கோடி அல்லவா.

**ஒருபக்கம் நெருக்கத்தின் மிகுதி, கதவுகள் அடைக்கப்பட்டதால் காட்டப்படும் துரிதம். மறுபக்கம் மக்கள் தொகைப் பெருக்கம். இதற்கிடையில் தேவ சபையில் கன்றுக்குட்டி நடனங்கள், அசட்டை, வீண் செலவுகள், திசைதிருப்ப ஆவிக்குரிய போர்வையில் சத்துரு செய்யும் உபாயத் தந்திரங்கள் (அதுவும் தேவ ஊழியர்களைக் கொண்டே) அனைத்தும் அறிந்து, எச்சரிக்கை செய்ய தேவ சபை எழும்பி நிற்காதோ!**

GEMS ஊழியத்தில் தீவிரம் காட்ட, 7 வகை ஊழியங்களிலும், தேவ உதவியுடனும், பங்காளர்களுடனும், ஜெபிக்கிற தேவ பிள்ளைகளின் ஒத்தாசையினாலும், பலவிதமான காரியங்களை முன்னெடுக்க தேவன் தயை செய்திருக்கிறார்.

எல்லாவித பணிகளையும் **(சுவிசேஷப் பணி, சபை நிறுவும் பணி, பயிற்சிப் பணி, கல்விப் பணி, மருத்துவப் பணி, மனிதாபிமானப் பணி, ஊடகப் பணி மற்றும் நிர்வாகத்திலும்)** விசாலமாக்கவும், தன்னிறைவு கொண்டதாகச் செயல்படுத்தவும், இருக்கின்ற அடுத்த பத்தாண்டு திட்டத்தில் (கிறிஸ்துவின் வருகை தாமதிக்கும் எனில்) சமுதாயங்களை தேவ இராஜ்யத்திற்கு ஆதாயப்படுத்தவும் உங்கள் ஜெபத்தை நாடுகிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, அதற்காக **ஊழியர்களையும்** தேவன் எழுப்பித்தரவேண்டும். வரும் ஆண்டில் **'GATHER STRENGTH AND I.M.P.A.C.T'** (I MUST PREPARE A COMMUNITY TODAY) என்ற குறியீட்டின் கீழே செயல்பட எடுக்கும் எல்லா முயற்சிகளும், தேவ சமூகத்தில் காத்திருந்து பெற்றதின் விளைவு.

எப்பொழுதுமே பணிக்கு **"வேலையாட்கள்** தேவை'. தேவ கரம் நம்மை வழிநடத்தவும், தேவ சத்தம் கேட்டு **கீழ்ப்படியும்** இதயம் தலைவர்கள் அனைவருக்குள்ளும் இருக்கவும் உங்கள் ஜெபம் தேவை. இயேசுவும் இதற்காகத்தானே ஜெபித்தார் (யோவான் 17:21). நம்முடைய ஜெபமும் இதனைச் சார்ந்தே இருப்பதாக.

**திறவுண்ட வாசல் அடைக்கப்பட ஆயத்தங்கள் நடக்கிறதே**
**திறமைகளை விரயமாக்கும் திருச்சபையே நீ திரும்பிப் பார்க்காதே**
**தினம் தினம் செத்து மடிவோர் உன்னை அசைக்கவில்லையோ!**
**தூய ஆவியின் பெலனில் நீ நிற்க உன் இதயத்தை நிரப்பாதோ**

**தேவ பிள்ளைகளையே கொண்டு திறமையாய் சத்துரு திட்டங்களை நிறைவேற்றுகிறான்**
**தேவன் காணாதிருக்கிறார் என்று எண்ணி திடப்படுத்திக்கொள்ளாதே**
**தூக்க மயக்கம் உன்னை உணர்வற்றவனாக மாற்றி உளறவைத்துவிட்டதோ**
**தூயவரின் பணியில் தயக்கம் காட்டி தாமதம் செய்துவிடாதே**

**துரிதம் காட்டவேண்டிய வேளையில் தூக்கம் உன்னைத் தடுக்காதபடி பார்த்திடு**
**துரத்துண்டோர் உண்டு காணாமற்போனோரும் ஏராளம் உண்டென்பதை மறக்காதே**
**தூரம் போய்விட்டோரும் உண்டு நசல் கொண்டோருக்குக் குறைவில்லையே**
**தூயவரின் அன்பை நீ பகிராவிடில் யார் உண்டு அவரின் பணி செய்ய!**

**அன்பரின் அறுவடைப் பணியில்**
**அன்பு சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்**

# பிதாவின் மேலான திட்டம்

சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

**நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென். (எபே.3:20,21)**

'வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிறவர்' நம்முடைய தேவன். அப்போஸ்தலனாகிய பவுல் தனது வாழ்க்கையின் அனுபவத்தில் இதனை அறிந்துகொண்டதும், புரிந்துகொண்டதும், உடனே அவனது உள்ளத்தில் ஆண்டவரை ஆராதிக்கும் உணர்வும், அவரை துதிக்கும் துதியும் பொங்கி எழுகின்றது; எனவே, பரிசுத்த ஆவியானவரால் அவனுக்குள் எழும்பும் அந்த உணர்வினால் உந்தப்பட்டவனாக, பின் வரும் வசனத்தில், 'சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்' (எபே. 3:21) என்று எழுதுகின்றான். பவுலுக்கு உண்டாயிருந்த அறிவு நம்முடைய வாழ்க்கையிலும் காணப்படுமென்றால், ஆண்டவரை ஆராதிக்கும் உணர்வு நம்முடைய உள்ளத்தில் தானாகவே பொங்கி எழுவது நிச்சயம்; அப்படிப்பட்ட ஆராதனையிலிருந்து எதுவும், எப்படிப்பட்ட சூழ்நிலையும் நம்மை தடுத்து நிறுத்த இயலாது.

**யூதேயாதேசத்தின் ராஜாவாகிய ஏரோதின் நாட்களில், அபியா என்னும் ஆசாரியவகுப்பில் சகரியா**

**என்னும் பேர் கொண்ட ஆசாரியன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தி, அவள் பேர் எலிசபெத்து. அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்.** (லூக். *1:5,6*)

சுமார் 400 ஆண்டுகளாக, தலைமுறை தலைமுறையாகவும், சந்ததி சந்ததியாகவும், மனிதர்கள் தேவ சத்தத்தைக் கேட்காதிருந்தார்கள்; அக்காலம் இருண்ட காலம் என்று கருதப்படுகின்றது. எழுதப்பட்ட வசனம் ஜனங்களிடத்தில் இருந்தது, அதனை விவரிக்கும்படியாக நியாயாதிபதிகளும் அவர்களுக்குள் காணப்பட்டார்கள், ஆசாரியர்கள் இருந்தனர்; என்றபோதிலும், தீர்க்கதரிசிகள் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தேவ சத்தம் ஜனங்களுக்கு உண்டாகவில்லை. தேவனுடைய திட்டத்தை ஜனங்களுக்கு வெளிப்படுத்துவதும் மற்றும் ஜனங்களிடத்தில் காணப்படும் குறைவுகளைச் சுட்டிகாட்டுவதும் மிகவும் குறைந்து காணப்பட்டன. அந்நாட்களில், அவர்களிடத்தில் இருந்ததெல்லாம், மோசே எழுதிக்கொடுத்திருந்த நியாயப்பிரமாணப் புத்தகம் மாத்திரமே; அதுவும், இன்று நம்முடைய கரங்களில் அவரவர் பேசும் மொழிகளிலேயே வேதாகமம் காணப்படுகிறதைப் போல, அக்காலத்தில் அவர்கள் எல்லோர் கைகளிலும் காணப்படவில்லை. ஆண்டவரை ஆராதிக்க ஆலயத்திற்குச் செல்லும் வேளையில், ஆலயத்தில் வாசிக்கப்படும்போது மாத்திரமே அதனை கேட்டுவந்தார்கள்.

நானூறு வருடங்கள் எவ்விதமான கர்த்தருடைய சத்தமும் கேட்கப்படாதபோதிலும், ஓர் இருண்ட காலமாகவே அது மனிதர்களுக்குக் காட்சியளித்தபோதிலும், ஆசாரியனாகிய சகரியாவும் அவன் மனைவி எலிசபெத்துவும், **"கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்" (லூக். 1:6)**. என்றபோதிலும், குழந்தை வேண்டி அவர்கள் செய்த நீண்ட கால ஜெபத்திற்கான பதிலை அதுவரை அவர்கள் பெற்றுக்கொள்ளாதிருந்தார்கள். தூதன் அவனை நோக்கி: 'சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக' (லூக். *1:13*) என்று கூறுவதினால், 'குழந்தை வேண்டும்' என்பதற்காக அவர்கள் தொடர்ந்து ஜெபித்துவந்தார்கள் என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடிகின்றதே.

தங்களுடைய வாழ்க்கையின் பிரதான தேவையான ஒரு குமாரனுக்காக, தொடர்ச்சியாக இடைவிடாமல் அவர்கள் ஜெபித்துக்கொண்டிருந்த அந்நாட்களில், 'தேவனுடைய எல்லா கற்பனைகளைக் கைக்கொண்டும், நியமங்களின்படி குற்றமற்றவர்களாக நடந்தும்' தேவனிடத்திலிருந்து ஏன் எங்களது ஜெபத்திற்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை என்று அவர்கள் நினைத்திருக்கக்கூடும். தேவனுக்கு முன்பாக குற்றமற்றவர்களாக எங்களது வாழ்க்கையைத் தொடருகின்றோம், தேவனால் எழுதிக்கொடுக்கப்பட்டவைகளை ஒழுங்காகவும், தவறாமலும் வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றோம், தேவாலயத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்ற பொறுப்புகளை, தேவனே எங்களது கரங்களில் தந்திருக்கின்றார் என்று எண்ணி, கடமையுணர்வுடன் உண்மையாகவும் மனப்பூர்வமாகவும் தொடர்ந்து நிறைவேற்றிவருகின்றோம்; நீதிமான்களாக வாழுகின்றோம், தேவனிடத்தில் வேண்டுதல் செய்கின்றோம், தேவன் கொடுத்த பணிகளை உண்மையுடனும் மற்றும் உத்தமத்துடனும் நிறைவேற்றுகின்றோம்; எனினும் ஜெபத்திற்கான பதில் கிடைக்கவில்லையே என்று அவர்கள் எண்ணியிருக்கக்கூடும்.

காலம் கடந்துகொண்டே போகிறது, சரீரத்தின் பெலனும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டேவருகின்றது; இந்நிலையில், தனக்குப் பின் ஆசாரியப் பணியினைத் தொடர, ஒரு குமாரனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறான் சகரியா. சகரியா ஆசாரியனாயிருப்பதினால், அக்காலத்தின் நியமத்தின்படி, அவனுடைய குமாரனும் ஆசாரியனாகவே இருப்பான். தேவனால் நியமிக்கப்பட்டபடி, லேவியர்களே ஆசாரியர்களாகும் உரிமை பெற்றவர்கள்; எனவே, ஒரு ஆசாரியன் பிறப்பதற்ககாக அவர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருந்து ஜெபித்திருக்கக்கூடும்.

ஆனால், பூமியில் தன்னுடைய கிரியையினை நிறைவேற்றும் காலம் தேவனுக்கு வந்தபோதோ, முழு உலகத்தில் இருக்கும் ஜனங்களையும் மீட்கும்படியாக, தன்னுடைய ஒரே பேறான குமாரனைப் பலியாகக் கொடுக்கும்படியான காலம் வந்தபோதோ, அதற்கான வழியினை ஆயத்தப்படுத்துவதற்கான ஒரு மனிதன் ஆண்டவருக்குத் தேவையாயிருந்தது. **சகரியாவும், எலிசபெத்தும் ஒரு குமாரனுக்காக அல்லது ஒரு ஆசாரியனுக்காக ஜெபித்தார்கள்; ஆனால், தேவனுடைய விருப்பமோ தேசத்தை அசைக்கும் ஒரு தீர்க்கதரிசி பிறக்கவேண்டும் என்பதே.** பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்பும் ஒரு தீர்க்கதரிசி ஆண்டவருக்கு தேவையாயிருந்தது.

அக்காலத்திலே, ஆசாரியன் என்பவன், ஒரு வருடத்திற்கு ஆசாரியனாக தேவாலயத்தில் பணிகளைச் செய்து பின்பு தனது வீட்டிற்குத் திரும்பிவிடுவான். ஆனால், தேவனோ, தேசத்தின் கீழ்மட்டத்திலிருந்து உயர்மட்டம் வரைக்கும் உள்ள அனைத்து ஜனங்களையும், எல்லா தரப்பட்ட மக்களையும், சேவகர்களையும், தங்களை நீதிமான்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களையும்கூட அசைக்கும்படியான ஒரு தீர்க்கதரிசியை எழும்பப்பண்ணச் சித்தமாயிருந்தார்.

பிரியமானவர்களே! நீண்டகாலமாக பாரத்துடன் தொடர்ச்சியாக நாம் ஜெபித்துவரும் ஜெபம் ஒருவேளை கேட்கப்படாததுபோலக் காட்சியளிக்கலாம். அநேகர் வந்து, என்னுடைய ஜெபத்திற்குப் பதில் கிடைத்துவிட்டது, தேவனிடத்தில் நான் வேண்டிக்கொண்டது நிறைவேறிவிட்டது என்று சந்தோஷத்துடனும் மகிழ்ச்சியுடனும் சாட்சி சொல்லும்போது, என்னுடைய ஜெபம் மாத்திரம் இன்னும் ஏன் கேட்கப்படவில்லை என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கக்கூடும். என்றபோதிலும், அப்படிப்பட்ட நேரங்களில், **நாம் வேண்டிக்கொள்ளுவதற்கும், நினைப்பதற்கும் அதிகமாக நமது ஜெபத்திற்குப் பதில் கொடுக்க தேவன் விருப்பமாயிருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.** நம்முடைய ஜெபம், ஒருவேளை ஒரு ஆசாரியன் போதும் என்பதாயிருக்கலாம்; ஆனால், தேவனோ தன்னுடைய திட்டத்தை இந்த உலகத்தில் நிறைவேற்றவும், தான் விரும்புகின்ற வண்ணம் தனது சித்தத்தை இந்த பூமியில் செய்துமுடிக்கவும், ஒரு தீர்க்கதரிசியை எழும்பப்பண்ண விருப்பமுள்ளவராயிருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். நமது வேண்டுதல்களுக்கும் மேலான, அவர் விரும்பும் பதிலை நமது வாழ்க்கையில் தர அவர் போதுமானவர்.

என்றபோதிலும், தங்களது ஜெபத்திற்குப் பதில் வந்தபோதோ, ஆசாரியனாகிய சகரியாவினால் உடனே அதனை விசுவாசிக்க இயலவில்லை. 'நான் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்; உன்னுடனே பேசவும், உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்' (லூக். *1:19*) என்று தன்னை அடையாளப்படுத்தி உறுதிபடக் கூறினபோதிலும்கூட, சகரியாவினால் ஏற்றுக்கொள்ள இயலாதிருந்தது. அதுமாத்திரமல்ல, அந்நாட்களுக்குப்பின்பு, அவன் மனைவியாகிய எலிசபெத்து கர்ப்பவதியாகி: ஜனங்களுக்குள்ளே எனக்கு உண்டாயிருந்த நிந்தையை நீக்கும்படியாகக் கர்த்தர் இந்த நாட்களில் என்மேல் கடாட்சம் வைத்து, எனக்கு இப்படிச் செய்தருளினார் என்று சொல்லி, ஐந்து மாதம் வெளிப்படாதிருந்தாள் (லூக். *1:24,25*) என்றும் வாசிக்கின்றோமே. தனது வாழ்க்கையில் சந்தோஷ மான காரியம் நடந்திருக்கின்றது, அநேக நாட்களாக தான் செய்த

விண்ணப்பத்திற்கான பதில் கிடைத்திருக்கின்றது, பல வருடங்களாக ஆவலுடன் காத்திருந்ததற்கான பலன் தனக்கு வந்து சேர்ந்திருக்கின்றது; என்றபோதிலும், வெட்கத்தினால் உலகத்தாருக்காக வெளிப்படாதிருந்தாள் எலிசபெத்து. **தேவதூதனின் வார்த்தைகளைக் கேட்டபோது சகரியாவுக்கு சந்தேகம் உண்டாயிற்று, எலிசபெத்தையோ வெட்கம் மூடிக்கொண்டது.**

பிரியமானவர்களே! பல வருடங்களாக தேவ சமூகத்தில் தொடர்ந்து நாம் ஜெபித்துவந்தாலும், நமக்குள்ளும் இப்படிப்பட்ட சந்தேகமும், வெட்கமும் காணப்படக்கூடும். ஆனால், தேவனோ, நம் மூலமாக இந்த உலத்தில் தனது கிரியையினைச் செய்ய ஆயத்தமாயிருக்கின்றார். எனவே, பவுலோடுகூட இணைந்து, நாமும் '**நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையுள்ளவர்**' என்று நிச்சயமாகக் கூறமுடியும். அப்படிப்பட்ட விசுவாசத்தின் கண்களை இந்த ஆண்டில் கர்த்தர் நமக்குத் தருவாராக. நம்முடைய ஜெபம், தேவனுடைய தேவைக்கு ஒத்துப்போகாததாகக் காணப்பட்டாலும், நாம் விரும்புகிறதற்கும் மேலாக பதிலளிக்க அவர் போதுமானவர் என்ற நம்பிக்கை நம்மை நிரப்பட்டும்.

சகரியா அதனைப் புரிந்துகொண்ட பின்னதாகவே, 'நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும், நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய். அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது' (லூக். *1:76-79*) என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றான். உலகத்திலிருக்கும் ஜனங்களை மீட்கும்படியாக வரவிருக்கும் ஆண்டவருக்காக வழியை ஆயத்தப்படுத்தும் ஒரு குமாரன் தனக்குப் பிறக்கப்போவதை அறிந்துகொண்ட சகரியா, சத்தமிட்டு ஆண்டவரை ஆராதிக்கிறான். **இப்படிப்பட்ட மனநிலையோடு தேவனை நாம் நோக்கிப் பார்ப்போமென்றால், நம்முடைய வாழ்க்கையிலும், நம்முடைய விருப்பத்தைக் காட்டிலும் மேலான அவருடைய சித்தம் நிச்சயம் நிறைவேறும்.**




## போஜ்புரி III கோட்டம்

**ஜனவரி 01** **பர்ரூ**

பதேரி கிராமத்தில் முதல்முறையாக சுவிசேஷத்திற்கு வழி திறக்கப்பட்டு சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. 31 இடங்களில் சுமார் 1700 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. ஞாயிறு ஆராதனையில் 96 பேர் கலந்து கொண்டனர். புது விசுவாசிகளில் 17 பேர் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக தங்களை ஒப்புக்கொடுத்துள்ளனர். பிரேந்தர் ராம் குடும்பத்தினர் சபைக்கு புதிதாக வருகின்றனர். விஜய் சபைக்கு வருவதை தடைசெய்கிறவர்களின் மனமாற்றத்திற்காவும், வயிற்று புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள 10 வயதான சிறுமி ஜூலி குமாரி மற்றும் உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கிற சந்தாதேவி, சுமிதாதேவி ஆகியோரின் சரீர சுகத்திற்காகவும், சுவிசேஷ ஊழியத்திற்கு கிராமப்பகுதியில் காணப்படும் எதிர்ப்புகள் மாறவும், விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் ஜெபியுங்கள்.

**ஜனவரி 02** **நௌபத்பூர்**

சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட 9 கிராமங்களில் செய்யப்பட்ட பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 200 பேருக்கு புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன.

சபையில் திருவிருந்து ஆராதனை நடத்தப்பட்டது. தாங்கள் கேட்ட வசனத்திற்கு ஒப்புக்கொடுத்த பேபி, சோனி, நாகேந்தர், சுமந்திதேவி ஆகிய 4 பேர் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக உள்ளனர். மனநிலை பாதிக்கப்பட்டிருக்கிற ரானு யாதவ் என்பவரின் சுகத்திற்காகவும், பிங்கிதேவியின் குடும்ப சமாதானத்திற்காகவும், லால்பாலு ஷா இரட்சிக்கப்படவும், டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்த உமேஷ் வர்மாவின் 4 பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும், ராகேஷ், சந்தேஷ்வர் பாரதி, சுனில் ஆகியோர் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலையாகவும் ஜெபியுங்கள்.

## ஜனவரி 03 — சஹராபூர்

கோபால்பூர், ராஹிம்பூர், சுபயி ரோஹ்னா, பதஹ்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் கொடுத்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக சந்திக்கப்பட்டவர்கள் வாஞ்சையுடன் வசனத்தைக் கேட்டு வருகிறார்கள். சபையில் ஞாயிறு ஆராதனை, உபவாசக் கூடுகை மற்றும் ஆவிக்குரிய ஐக்கியக் கூடுகை தொடர்ச்சியாக நடத்தப்படுகிறது. இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டப்படவும், மதவாதிகளால் காணப்படும் தடைகள் நீங்கவும், விசுவாசிகளின் குடும்பங்களில் காணப்படும் ஏழ்மைநிலை நீங்கவும், சபை ஆராதனையில் புதிய விசுவாசிகளின் வருகைக்காகவும் ஜெபியுங்கள்.

## ஜனவரி 04 — பக்தியார்பூர்

கன்ஜா, கரனௌதி, லஷ்மன்பூர், ராம்நகர், சிர்சி, சேர்பூர், கங்பட், மிர்தஹாசௌவுக், மஹ்முதா, சந்தா, சம்பாபூர், மஹமத்பூர் ஆகிய 12 இடங்களில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தொடர் ஊழியத்தினால் தொடப்பட்டவர்களில் புதிதாக 3 பேர் சபை ஆராதனையில் கலந்துகொள்கிறார்கள். சந்தா, கர்னௌதி, மஹமத்பூர் ஆகிய கிராமங்களில் விசுவாசிகளின் வீடுகளில் வீட்டுசபை ஆராதனை நடத்தப்பட்டது. ராணிசராய் கிராமத்தில் ஜெபக் கூடுகை நடத்துவதற்கு அக்கிராமத்தினர் பள்ளிக்கூடத்தை திறந்து கொடுத்துள்ளனர். ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக இருக்கிற 2 புதிய விசுவாசிகளுக்காகவும், உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கிற முன்சுன் குமார், குருணாதேவி, குஷ்புதேவி, அஜய் தாஸ் ஆகியோரது சுகத்திற்காகவும், சபை கட்டிடத்தை சுற்றிலும் சுவர் கட்டவும் மற்றும் மின் இணைப்பு கிடைக்கவும் ஜெபியுங்கள்.

## ஜனவரி 05 — மக்தூம்பூர்

கோஜ்பூரா, பெர்சோனா, ஜம்மு காஷ்மீர், மஞ்சுடோலா ஆகிய இடங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டு ஆர்முள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் பணி செய்யப்பட்டது. இப்பணித்தளம் ஜெம்ஸ் செயல்பாட்டு மையமாக செயல்படுகிறது. சபை ஊழியம், கணிணிப் பயிற்சி, தையல் பயிற்சி செயல்பட்டு வருகிறது. தங்கியுள்ள வாலிபப் பிள்ளைகளுக்கு இலவசமாக பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. 4 இடங்களில் சிறுவர்கள் மத்தியில் ஞாயிறு வகுப்புகள் நடைபெற்று வருகின்றது. அடிக்கடி வியாதிப்படுகிற தையல் பயிற்சி மாணவி சாரதாதேவியின் சுகத்திற்காகவும், திருமணமாகி குழந்தைப் பாக்கியத்திற்காக காத்திருக்கும் அனு குமாரி, மீனா குமாரி, ரிஷா குமாரி, புஷ்பா குமாரி, நிந்து குமாரி ஆகியோரின் கர்ப்பத்தை தேவன் ஆசீர்வதிக்கவும், காவலர் பணிக்காக தேர்வு எழுதியுள்ள இப்பணித்தள சபை வாலிபர்கள் தேர்ச்சிப்பெறவும், பழுதடைந்துள்ள இம்மைய கட்டிடப் பணிகள் விரைவில் சீர்செய்யப்படவும் ஜெபியுங்கள்.

## ஜனவரி 06 — கோஜ்புரா

கோஜ்புரா, மஹர்சா, மன்தோஷ் ஆகிய இடங்களில் சுவிசேஷப் பணி தடையின்றி நடத்தப்பட்டது. 100 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் கடந்துசென்றது. இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள விசுவாசிகளின் வீடுகளில் வீட்டுசபை ஆராதனை நடத்தப்படுகிறது. கோஜ்புரா பகுதியில் வீட்டு சபை நடைபெற்றது. தயாநகர் கிராமத்தில் நடத்தப்பட்ட ஜெபக் கூடுகையில் 30 பேர் கலந்துகொண்டனர். சபையில் வாலிபர்கள் மற்றும் சிறுவர்களுக்கு சிறப்பு ஆராதனை நடத்தப்படுகிறது. இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டுள்ள உத்தம் மசியின் அற்புத சுகத்திற்காகவும், பிந்து குமாரி, அமர் குமார், அசோக் குமார், மேஹா குமாரி, விமல் குமார், பாரதி குமார், விகாஷ் குமார் ஆகியோருக்கு வேலை கிடைக்கவும், பாரதியின் கணவர் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

## ஜனவரி 07 — முசாபர்பூர்

பர்காவ், ஜூரோ மாசல், ஷாவாஜ்பூர், சாந்திபூர், படுகா, ரோதுவா ஆகிய இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. தானுசெளவுக், இமாம்கன்ஜ், சந்த்வாரா, லக்ஷ்மன்நகர், போலா, நோர்வலி, தோபி செளவுக், ராம்பாஹ், பாலுஹாட் ஆகிய இடங்களில்

விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. சாந்திபூர் பகுதியில் வாலிபர்களுக்காக ஒருநாள் கூடுகை நடத்தப்பட்டது. தைராய்டு மற்றும் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சாந்தி, கர்ப்பப்பை பாதிக்கப்பட்டுள்ள ரிங்குதேவியின் சுகத்திற்காகவும் மற்றும் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக இருக்கிற விசுவாசிகள் தேவனுடைய நீதியை நிறைவேற்றவும் ஜெபியுங்கள்.

## ஜனவரி 08 குஸ்ருபூர்

